# T20 Current Affairs

## for

# TNPSC

## Nov - 2021

Towards Your Success


**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 944 506 5552 | Telegram: Thulirr Current Affairs**

# Table of Contents

தமிழக நிகழ்வுகள் ....... 3
இந்திய நிகழ்வுகள் ....... 7
பொருளாதாரம் ....... 9
உலக நிகழ்வுகள் ....... 10
சுற்றுச்சூழல் ....... 11
அறிவியல் & தொழில்நுட்பம் ....... 12
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....... 12
மாநாடுகள் ....... 13
திட்டம் ....... 14
பாதுகாப்பு ....... 15
விருதுகள் ....... 15
விளையாட்டு நிகழ்வுகள் ....... 18
புள்ளி விவரம் ....... 21
முக்கிய தினம் ....... 22

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirracademy.in/currentaffairs.php?ca_category=T20-T



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **சிலம்பாட்ட வீரர்களுக்கு அரசுப்பணியில் 3% ஒதுக்கீடு**
  - அரசு வேலை வாய்ப்பில் 3 சதவீத விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு பட்டியலில் சிலம்பாட்ட வீரர்களும் இடம்பெறுவார்கள் என்ற உத்தரவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- **நாட்டின் முதல் உணவு அருங்காட்சியகம்**
  - தஞ்சாவூரில் இந்திய உணவுக் கழகத்தின் மண்டல அலுவலக வளாகத்தில் நாட்டின் முதல் உணவு அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.
- **புதிய வேளாண் காடுகள் வளர்ப்புத் திட்டம்**
  - புதிய வேளாண் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம் என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டம் ரூ.11.14 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது.
- **ஊராட்சித் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் அதிகரிப்பு**
  - ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர மதிப்பூதியம் ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- **“முதல்வரின் முகவரி” புதிய துறை உருவாக்கம்**
  - முதல்வரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, “முதல்வரின் முகவரி” என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது.
  - முதல்வரின் தனிப்பிரிவு, முதல்வரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, உங்கள் தொகுதியில் முதல்வர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, “முதல்வரின் முகவரி” என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது.
- **100% முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்ட மாவட்டம் காஞ்சிபுரம்**
  - தமிழகத்தில் 100 சதவீதம் முதல் தவணைகரோனா தடுப்பூசி செலுத்திய மாவட்டமாக காஞ்சிபுரம் உருவெடுத்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- **தமிழக வீரர் பழனிக்கு 'வீர் சக்ரா'**
  - கல்வான் பள்ளத்தாக்கு மோதலின்போது எதிரிப் படைகளுடன் துணிச்சலுடன் மோதி வீர மரணமடைந்த தமிழக வீரர் கே.பழனிக்கு 'வீர் சக்ரா' விருதை அவரது மனைவியிடம் மனைவியிடம் குடியரசுத் தலைவர் வழங்கினார்.
- **கருத்தடை செய்யும் ஆண்களுக்கு ‘தங்கத் தந்தை’ விருது**
  - தமிழகத்திலேயே முதல்முறையாக, கரூர் மாவட்டத்தில் கருத்தடை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ. 5,000 ஊக்கத் தொகையுடன் ‘தங்கத் தந்தை’ விருது அல்லது இலவச வீட்டுமனைப் பட்டா போன்ற ஏதேனும் ஒரு அரசுத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் த. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **'வலிமை' சிமெண்ட் அறிமுகம்**
  - 'வலிமை' என்ற பெயரிலான புதிய ரக சிமெண்ட்டின் விற்பனையை முதல்வர் மு.க.ஸ்டாலின், தொடக்கி வைத்தார். இரண்டு வகைகளில் இந்த சிமெண்ட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
  - வலிமை சிமெண்ட் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. அரியலூரில் எல் அன்ட் டி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் புதிய சிமெண்ட் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையில் வலிமை சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது.
- **தமிழக அரசு வனவிலங்கு கட்டுப்பாட்டுப் பணியகம்**
  - தமிழக அரசு வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகத்தை சென்னை, கோயம்பத்தூர், மதுரை மற்றும் ராமநாதபுரத்தில் அமைக்கவுள்ளது.
- **'தமிழகத்தில் முதல்முறையாக கடல்பாசி திட்டம்'**
  - இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் கடல்பாசி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த உள்ளது.
- **தாம்பரம் மாநகராட்சியாக அறிவிப்பு**
  - தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான அவசரச் சட்டத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார். இதனையடுத்து தமிழகத்தின் 20-வது மாநகராட்சியாக தாம்பரம் உருவெடுத்துள்ளது.
- **முப்பரிமாணத் தொழில்நுட்பத்தில் கண்புரை அறுவை சிகிச்சை**
  - நாட்டிலேயே முதன்முறையாக முப்பரிமாணத் தொழில்நுட்பத்தில் 3 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொண்டு எழும்பூர் அரசு கண் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.
- **எழுத்தாளர்களுக்கு பொற்கிழி விருதுகள் 2020-2021**
  - 2020-2021-ஆம் ஆண்டுகளுக்கான 'கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி' விருதுகளை எழுத்தாளர்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.
  - தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் ஆண்டுதோறும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நான்கு தமிழ் எழுத்தாளர்களுக்கும், பிற இந்திய மொழிகளில் ஒரு எழுத்தாளருக்கும் ஆங்கிலமொழி எழுத்தாளர் ஒருவருக்கும் மறைந்த முதல் கருணாநிதி பெயரிலான விருது வழங்கப்பட்டு வருகிறது.
- **அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**
  - மருத்துவத் துறையில் திறம்பட செயல்பட்டதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் அரங்கில் வழங்கப்பட்டது.
- **'பபாசி' தலைவராக எஸ்.வயிரவன் தேர்வு**
  - தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 'பபாசி தலைவராக எஸ். வயிரவன் பொறுப்பேற்றுக்கொண்டார்.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

| பொற்கிழி விருதுகள் - 2020 | |
|---|---|
| **பெயர்** | **துறை** |
| ந.முருகேசபாண்டியன் | உரைநடை |
| அ.மங்கை | நாடகம் |
| அறிவுமதி | கவிதை |
| பொன்னீலன் | நாவல் |
| ஆர்.பாலகிருஷ்ணன் | ஆங்கிலம் |
| சித்தலிங்கையா | பிற இந்திய மொழி (கன்னடம்) |
| **பொற்கிழி விருதுகள் - 2021** | |
| **பெயர்** | **துறை** |
| அபி | கவிதை |
| இராசேந்திரசோழன் | புனைவிலக்கியம் |
| எஸ். ராமகிருஷ்ணன் | உரைநடை |
| வெளிரங்கராஜன் | நாடகம் |
| மருதநாயகம் | ஆங்கிலம் |
| நதித் சாகியா | பிற இந்திய மொழி, காஷ்மீரி |

❖ **மூத்த தமிழ்த்தொண்டர் நா. நஞ்சுண்டன் காலமானார்**
- நூலாசிரியர், சொற்பொழிவாளர் என்ற பன்முகத்தனமாய் கொண்ட கோவை கம்பன் கழகச் செயலாளர் நா. நஞ்சுண்டன் காலமானார்.
- கம்பன் கண்ட எழிலோவியம், அண்ணல் காந்தி போன்ற நூல்களுடன் புதுயுகக் கவிஞர் பாரதி, தமிழ் வளர்த்த கதை என்னும் தொகுப்பு நூல்களையும் படைத்துள்ளார்.
- கம்பர்சீர் பரவுவார், இலக்கியச் சுடர் உள்ளிட்ட 10 விருதுகளையும், 2016-ஆம் ஆண்டு தமிழக அரசின் இளங்கோவடிகள் விருதையும் பெற்றுள்ளார்.

❖ **எழுத்தாளர் மற்றும் இயக்குனர் கோவி.மணிசேகரன் காலமானார்**
- 1992ஆம் ஆண்டு இவரது வரலாற்றுப் புதினமான குற்றாலக் குறவஞ்சி தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது.
- இவர் இயக்கிய தென்னங்கீற்று என்ற தமிழ்த்திரைப்படம், தமிழக ரசிகர்மன்ற விருதும் கர்நாடக அரசின் நீரிக்ஷே விருதும் பெற்றது.
- 'யாகசாலை' என்ற சமூக நாவலுக்காக உலகப் பல்கலைக்கழகம் கோவி. மணிசேகரனுக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.
- இவரது வாழ்க்கை வரலாற்றை 'கோவி. மணிசேகரன் எழுத்தும்- வரலாறும்' என்ற தலைப்பில் அண்ணாமலை பல்கலை. கடந்த 2016-ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளது.

❖ **சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி நியமனம்**
- சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம்.துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி பொறுப்பேற்கும் வரை அந்தப் பதவியில் நீதிபதி எம்.துரைசாமி இருப்பார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சஞ்சீவ் பானர்ஜி மேகாலய உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **பொறுப்பு தலைமை நீதிபதியாக முனீஸ்வர் நாத் பண்டாரி பதவியேற்பு**

- சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக முனீஸ்வர் நாத் பண்டாரிக்கு ஆளுநர் ஆர்.என். ரவி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைத்தார்.

❖ **"ஸ்வமித்வா" (SVAMITVA) திட்டம்**

- இந்திய கணக்கெடுப்பு துறையும், தமிழ்நாடு அரசும் ஸ்வமித்வா (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
- பஞ்சாத்து ராஜ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இத்திட்டம். 2023-24 ஆண்டிற்குள் 18,463 கிராமங்களில் நில கணக்கெடுப்பு முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கிராமப்புறங்களில் மின்னணு சொத்து அட்டை வழங்கும் இத்திட்டத்தின் மூலம் கிராம மக்கள் வங்கிகளில் எளிதில் கடன் பெற வசதியாகவும் நிலங்கள் சுரண்டப்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் ஏப்ரல் 24, 2020 -ல் அறிமுகம் செய்யப்பட்டது.

❖ **பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்களை பதிவு செய்ய இணையதளம்**

- சென்னை உச்சநீதிமன்ற வளாகத்திற்குள் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான புகார்களை பதிவு செய்ய The Gender Sensitization and Internal Complaints Committee (GSICC) புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ **கிளாஸ்கோ ஐ.நா. பருவநிலை மாற்ற மாநாட்டில் தமிழக மாணவி**

- ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் ஐ.நா. பருவநிலை மாற்ற மாநாடு அக்டோபர் 31 முதல் நவம்பர் 12-ஆம் தேதி வரை நடைபெற்றது.
- 'பருவநிலை மாற்ற தாக்கத்தை குறைக்கும் நடவடிக்கைகளை எடுக்க இன்றைய தலைமுறை காத்திருக்காது. நீங்கள் செய்யாவிட்டால் நாங்களே உலகை வழிநடத்துவோம்' என்று ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில் உலக தலைவர்கள் மத்தியில் இந்தியாவின் சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த 15 வயது பள்ளி மாணவி வினிஷா உமாசங்கர் வலியுறுத்தினார்.

❖ **விடுதலை போரில் தமிழகம் – புகைப்பட கண்காட்சி**

- விடுதலை போரில் தமிழகம் என்ற புகைப்பட கண்காட்சி சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

❖ **முதல்வரின் முதல் கையெழுத்து**

- முதல்வராக பதவியேற்ற பிறகு (ஸ்டாலின்) கையெழுத்திட்ட 5 கோப்புகள்
- 2.09 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் ரூ.4,000 கரோனா நிவாரண நிதி
- ஆவின் பால் திட்டத்துக்கு ரூ.3 குறைப்பு



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- மகளிர்க்கு அரசு நகர பேருந்துகளில் இலவச பயணம்
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் குறை (மக்கள் மனுக்கள் மீது தீர்வுகாணல்)
- தனியார் மருத்துவமனையில் கரோனா சிகிக்சைக்கான செலவினத்தை முதல் அமைச்சர் காப்பீடு திட்டத்தில் அரசே ஏற்கும்.

❖ **முதலீட்டாளர்கள் மாநாடு – கோயம்புத்தூர்**

- தலைப்பு: "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு
- 1 டிரில்லியன் டாலர் (ரூ.74 லட்சம் கோடி) பொருளாதார இலக்கு
- இம்மாநாட்டில் 82 திட்டங்கள் மூலம் ரூ.52,549 கோடி மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்கும்.
- 92,000 வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்

❖ **கலைஞர் நூலகம்: (மதுரை)**

- கலைஞர் நூலகம் துவங்க 116 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது
- 2010-ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு துவங்கப்பட்டது.

❖ இந்திய அளவின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி GSDP – தமிழ்நாடு 2-ஆம் இடம்

❖ அகில இந்திய அளவில் சிறந்த ஆளுமைக் குறியீட்டில் தமிழகம் முதலிடம்

❖ 100% முதல் தவணை கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட மாவட்டம் – காஞ்சிபுரம்

❖ POCSO 2012 சட்டம் குறித்த விழிப்புணர்வு குழந்தைகள் எண் (1098)

❖ மாணவர்கள் உதவி பெற கட்டணமில்லா தொலைபேசி எண் (14417)

❖ மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் – 1070

❖ மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம் – 1077

## இந்திய நிகழ்வுகள்

❖ **காட்டுப்பனியா பழங்குடியினருக்கு ஆதார் அட்டை**

- தென் வயநாடு, நிலம்பூர் வனப் பகுதியில் வாழம் காட்டுப்பனியா பழங்குடியினர் மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் உதவியுடன் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆதார் அட்டைக்கு பதிவு செய்திருந்தனர். அவர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டது.
- பனியர் அல்லது பனியன் என்று அழைக்கப்படுபவர் கேரளாவை சேர்ந்த மிகப்பெரிய பழங்குடியினர் வகுப்பாகும்.
- வயநாடு மாவட்டம் மற்றும் கர்நாடகா பகுதியில் இவர்கள் வாழ்கின்றனர்.
- இவர்கள் பனியா மொழியை பேசுகின்றனர். இம்மொழி திராவிட மொழி குடும்பத்தை சேர்ந்ததாகும்.

❖ **சிபிஐ அமலாக்கத் துறை இயக்குநர்களின் பதவிக்காலம் நீட்டிப்பு**

- சிபிஐ இயக்குநர் மற்றும் அமலாக்கதுறை இயக்குநரின் பதவிக்காலம் தற்போது 2 ஆண்டுகளாக உள்ளது. இதனை 5 ஆண்டுகளாக நீட்டிக்கும் அவசர சட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இந்த சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் வழங்கியுள்ளார்.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **Kaiser-i-Hind பட்டாம்பூச்சி**
  - Kaiser-i-Hind வகை பட்டாம்பூச்சி அருணாச்சல பிரதேசத்தின் மாநில பட்டாம்பூச்சியாக அம்மாநில முதலமைச்சர் பெமா காண்டு (Pema Khandu) அறிவித்துள்ளார்.
  - அறிவியல் பெயர் Teinopalpus imperialis.
- **ஹபிப்கன்ஜ் இரயில் நிலையம் பெயர் மாற்றம்**
  - 18-ஆம் நூற்றாண்டை சேர்ந்த "கோண்ட் இனத்தின் இராணி கமலபதி பெயரில் ஹபிப்கன்ஜ் இரயில் நிலையம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
  - இராணி கமலபதி, 9-ஆம் நூற்றாண்டில் போபாலை ஆண்ட கடைசி இந்து இராணி ஆவார்.
- **தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (NFHS) 5-ன் இரண்டாம் கட்ட முடிவு**
  - தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (என்எஃப்எச்எஸ்) 5-ன் இரண்டாம் கட்ட முடிவுகளை நிதி ஆயோக் உறுப்பினர்கள் வெளியிட்டனர்.
  - தேசிய அளவில் மொத்த கருத்தரித்தல் விகிதங்களில் ஒரு பெண்ணுக்கான குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை மேலும் குறைந்து 2.2-லிருந்து 2.0 ஆகி இருக்கிறது. 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இது சண்டிகரின் 1.4 என்பதிலிருந்து உத்தரப்பிரதேசத்தின் 2.4 வரை உள்ளது.
  - அகில இந்திய அளவில் மருத்துவமனையில் மகப்பேறு விகிதம் கணிசமாக 79 சதவீதத்திலிருந்து 89 சதவீதமாக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் இது 100 சதவீதமாக உள்ளது.
- **அவசரகால பயன்பாடு கோவாக்ஸின் தடுப்பூசி WHO ஒப்புதல்**
  - கோவாக்ஸின் (Covaxine) தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டு பட்டியலில் சேர்க்க WHO ஒப்புதல் அளித்துள்ளது.
  - WHO தலைவர் – டெட்ரோஸ் அதனோம் கேப்ரியஸஸ்
  - கரோனா உயிரிழப்பை தடுக்கும் மாத்திரையை அமெரிக்கா ஃபைபஸர் (Pfizer) நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- **சிபிஐ – அமலாக்க இயக்குனர்கள் பதவி – 5 ஆண்டுகள் நீடிப்பு**
  - மத்திய புலனாய்வு மற்றும் அமலாக்கத் துறை இயக்குனர்கள் பதவிக் காலம் தற்போது 2 ஆண்டுகளாக இருக்கிறது. இதை 5 ஆண்டுகளாக மாற்றி, மத்திய அரசு அவசர சட்டம் பிறப்பித்தது.
- **29-ஆவது தென்மண்டல குழு கூட்டம் - 2021**
  - 29-ஆவது தென்மண்டல குழு கூட்டம் – 2021 ஆந்திரா மாநிலம் திருப்பதியில் நடைபெற்றது.
  - 2022-ம் ஆண்டில் 30- ஆவது தென்மண்டல குழு கூட்டம் கேரளாவில் நடைபெறவுள்ளது.
- **இ-ஷ்ரம் இணையதளம்**
  - அமைப்புசாரா தொழிலாளர்களை முறைபடுத்த தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் இ-ஷ்ரம் இணையதளத்தை துவங்கியுள்ளது.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இ-ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனம் – 2 லட்சம் காப்பீடு, ஓரளவு ஊனம் – 1 லட்சம் காப்பீடும் வழங்கப்படும்.

❖ **யுனெஸ்கோ UNESCO உறுப்பினராக இந்தியா**

- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இருந்து (UNESCO) உலக பாரம்பரிய குழுவின் உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.

❖ **பழங்குடிகள் கௌரவ தினம்**

- நவம்பர் 15, பிர்சா முண்டாவின் பிறந்தநாள் பழங்குடிகள் கௌரவ தினமாக கொண்டாடப்படும் (ஜன் ஜாதிய கௌரவ தினம்) என மத்திய அரசு அறிவித்துள்ளது.

❖ **இந்திய உடல் உறுப்பு தான தினம்**

- இந்தியாவில், 2010 - ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27 - ம் தேதி உடல் உறுப்பு தான நாள் கடைபிடிக்கப்படுகிறது.
- சர்வதேச உடல் உறப்பு தானம் கண்காணிப்பு வலைதள அறிக்கையின்படி (GoTT) முதல் இடத்தில் அமெரிக்கா, 2-வது இடத்தில் சீனாவும், 3-வது இடத்தில் இந்தியாவும் உள்ளன.
- இந்தியாவில் உடல் உறுப்பு அறுவை சிகிச்சையில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவிலேயே முதன்முதலாக, 2014-ம் ஆண்டில் உடல் உறுப்பு அறுவை சிகிச்சை ஆணையம் என்ற அமைப்பு தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது.

❖ **சர்வதேச திரைப்பட விழா – கோவா**

- 2021-ஆம் ஆண்டின் சிறந்த இந்திய நட்சத்திர விருது – ஹேமாமாலினி

❖ **காவல்துறை தலைவர்கள் மாநாடு** – லக்னோ (உத்திரப்பிரதேசம்) ஸ்மார்ட் காவல்துறை திட்டம் 2014-இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ இரசாயண பெட்ரோ கெமிக்கல் உற்பத்தி மையங்கள் குறித்த 2வது உச்சி மாநாடு – டெல்லி

❖ ஆசியாவின் மிகப்பெரிய சர்வதேச விமான நிலையம் – நொய்டா (உத்திரப்பிரதேசம்)

❖ 82-ஆவது அகில இந்திய பேரவை தலைவர்களின் மாநாடு – சிம்லா (ஹிமாச்சலப்பிரதேசம்)

❖ சர்வதேச நிதி சேவைகள் மைய ஆணையம் (GIFT) - காந்திநகர்,(குஜராத்)

## பொருளாதாரம்

❖ **மத்திய அரசு தமிழகத்துக்கு ரூ. 805.92 கோடி ஒதுக்கீடு**

- கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார வசதிகளை வலுப்படுத்த 15-ஆவது நிதி ஆணையம் அளித்த பரிந்துரைகளின்படி 19 மாநிலங்களுக்கு மொத்தம் ரூ. 8,45.3.92 கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு ரூ. 805.92 கோடி கோடியை மத்திய நிதித் துறை அமைச்சகம் விடுவித்துள்ளது.
- 15-வது நிதிக்குழுவின் தலைவர் என்.கே சிங்.
- 14-வது நிதிக்குழுவின் தலைவர் Y.V. ரெட்டி.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தங்கப் பத்திர வெளியீடு கிராம் விலை ரூ.4,791-ஆக நிர்ணயம்**
  - தங்கப் பத்திர விற்பனை நவம்பரில் தொடங்க உள்ள நிலையில் அப்பத்திரத்தின் விலையை கிராமுக்கு ரூ.4,791-ஆக நிர்ணயம் செய்து ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
  - தங்கப்பத்திர வெளியீட்டு திட்டத்தில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் 1 கிராம் முதல் அதிகபட்சம் 4 கிலோ வரையிலான தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்ய முடியும்.
- **'தமிழகத்துக்கான ஜிஎஸ்டி நிலுவைத் தொகை ரூ.4,943 கோடி'**
  - தமிழகத்திற்கு வழங்க வேண்டிய சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) இழப்பீட்டுத் தொகையில் கடந்த 2020-21 நிதியாண்டு முதல் நிகழ் (2021- 22) நிதியாண்டின் செப்டம்பர் வரையில் ரூ.4943 கோடி வரை நிலுவையில் உள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **பாகிஸ்தானில் சேதப்படுத்தப்பட்ட ஹிந்து கோயில் சீரமைப்பு**
  - பாகிஸ்தானின் பக்துன்குவா மாகாணம், தேரி கிராமத்தில் பழைமைவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட ஸ்ரீ பரம்ஹன்ஸ்ஜி மஹராஜ் கோயில் சீரமைக்கப்பட்டது. அதை அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தலைமை நீதிபதி குல்சார் அகமது திறந்து வைத்தார்.
- **தீபாவளியை முன்னிட்டு காந்திஜி நினைவு நாணயம்**
  - தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புதிய மகாத்மா காந்தி நினைவு நாணயத்தை பிரிட்டன் அரசு வெளியிட்டது.
  - இந்த நாணயத்தில் இந்தியாவின் தேசிய மலரான தாமரையின் வடிவமும் மகாத்மா காந்தியின் 'என் வாழ்க்கையே எனது செய்தி' என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளன. நாணயத்தின் மறுபுறம் பிரிட்டன் அரசியின் படம் இடம்பெற்றுள்ளது.
- **யுனெஸ்கோ வாரியத்துக்கு இந்தியா தேர்வு**
  - யுனெஸ்கோவின் நிர்வாக வாரிய உறுப்பினராக .2021 முதல் 2025-ம் ஆண்டு வரை இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- **அமெரிக்காவின் அதிபர் பொறுப்பை ஏற்ற முதல் பெண்**
  - மருத்துவப் பரிசோதனைக்காக அதிபர் ஜோ பைடனுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருந்த நேரத்தில் அமெரிக்காவின் அதிபராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் 85 நிமிஷங்கள் பொறுப்பு வகித்தார்.
  - அமெரிக்காவின் அதிபர் பொறுப்பை ஏற்ற முதல் பெண் என்ற பெருமையை கமலா ஹாரிஸ் பெற்றுள்ளார்.
- **உலகின் முதல் மின்சார தானியங்கி கார்கோ கப்பல்**
  - நார்வேயின் பிரபல உரத் தயாரிப்பு நிறுவனமான யாரா இன்டர்நேஷனல் உலகின் முதல் மின்சார தானியங்கி சரக்கு கப்பலை அறிமுகம் செய்துள்ளது.

- **ஒமைக்ரான் (பி.1.1.529)**
  - தென் ஆப்பிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்டது.
  - ஒமைக்கரான் என நவம்பர் 26, 2020-இல் WHO பெயரிடப்பட்டது.
  - அறிகுறி – காய்ச்சல், வரட்டு இருமல், இரவில் உடல் வியர்த்தல், உடல் வலி
- **சிர்கான் ஏவுகணை (ரஷ்யா)**
  - அதிநவீன ஹைபர்சோனிக் சிர்கான் ஏவுகணையை ரஷ்ய கடற்படை சோதனை செய்தது.
  - ஒலியை விட 9 மடங்கு வேகத்தில் செல்லக்கூடியது.
  - 1000கி.மீ தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் திறன் பெற்றது.

## சுற்றுச்சூழல்

- **கார்பன் சமநிலையை அடைய இலக்கு**
  - கார்பன் சமநிலையை 2050-ஆம் ஆண்டுக்குள் அடைவது என ஜி-20 நாடுகளின் உச்சிமாநாட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
- **சிந்து நதி டால்பின் கணக்கெடுப்பு**
  - சிந்து நதி டால்பின் (Indus River Dolphin) கணக்கெடுப்பினை மத்திய அரசு தொடங்க உள்ளது.
  - இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தால் (IUCN) சிந்து டால்பின் அழிந்து வரும் இனமாக அறிவிக்கப்பட்டுள்ளது .
  - சிந்து நதி டால்பினின் அறிவியல் பெயர்: Platanista gangetica minor.
  - பஞ்சாப் மாநில அரசு 2019-ஆம் ஆண்டு சிந்து டால்பினை மாநில நீர்வாழ் விலங்காக அறிவித்தது.
  - மே 10, 2010-ல் கங்கை டால்பின்கள் தேசிய நீர்வாழ் உயிரினமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் அறிவித்தது.
- **'கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் நமாமி கங்கை திட்டம்'**
  - ஒருமணி நேரத்தில் அதிக எண்ணிக்கையில், கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்கள் பதிவிடப்பட்டதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் கங்கை தூய்மைக்கான தேசியத் திட்டம் (நமாமி கங்கை) இடம்பிடித்துள்ளது.
  - ஜூன் 2014 "கங்கை நதி"யின் மாசுபடுதலை குறைக்கவும், பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் உருவாக்கப்பட்ட திட்டமாகும். நீர்வளத்துறை, நதி மேம்பாடு மற்றும் ஜல்சக்தி அமைச்சகத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுகிறது.
- **UNESCO-வின் படைப்பாற்றல் கொண்ட நகரங்களின் பட்டியலில் ஸ்ரீநகர் தேர்வு**
  - தன் கைவினை மற்றும் நாட்டுப்புற கலைக்கு சிறப்புக் குறிப்புடன், ஸ்ரீநகர், யுனெஸ்கோவின் படைப்பாற்றல் கொண்ட நகரங்களின் பட்டியலில் இணைந்திருப்பதற்குப் பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.
  - UNESCO துவக்கம்: 1945, தலைமையகம் – பாரிஸ், பிரான்ஸ்.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கோரிங்கா வனவிலங்கு பூங்கா (Coringa Wildlife Sanctuary)**
  - காக்கிநாடா அருகே உள்ள கோரிங்கா வனவிலங்கு பூங்காவில் கண்காணிப்பு கருவி, உயிரியாளர்கள் மீன்பிடி பூனைகள் என்றழைக்கப்படும் (Prionailurus Viverrinus) களத்தில் தடம் கண்காணிப்பு கருவி பொருத்தப்படவுள்ளது.
- **மாசில்லா பசுமை பயணம் திட்டம் - TN மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்**
  - சென்னையில் காற்று மாசினைக் குறைக்கும் வகையில் சென்னையில் உள்ள உயர்நிலை பள்ளி மாணவர்களுக்காக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் தொடங்கப்பட்டது.
  - இதன் சிறப்பம்சங்கள்:
    1. காலை 8-9 மாலை 3 – 4 சைக்கிளில் செல்லும் மாணவர்களுக்குப் பள்ளி நிர்வாகம் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.
    2. பள்ளி அருகில் தற்காலிக சைக்கிள் பாதை அமைத்தல்.
    3. பள்ளிக்கு அருகில் பாதுகாப்பான நடைபாதை அமைத்தல்.
    4. மாணவர்களுக்கு நற்சான்றிதழ் பள்ளிகளுக்கு விருதும் வழங்கப்படும்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **"டெலி-லா" செயலி அறிமுகம்**
  - மக்களுக்கான "டெலி-லா" கைப்பேசி செயலியை மத்திய சட்டம் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிமுகப்படுத்தினார்.
- **விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் வாங் யாபிங்**
  - சீன விமானப் படை பெண் விமானியான வாங் யாபிங், விண்வெளி நிலைய கட்டமைப்புப் பணிக்காக விண்வெளியில் நடந்து சாதனை புரிந்தார். இதன்மூலம் விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் என்ற வரலாற்றை அவர் படைத்துள்ளார்.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **பிரபல வரலாற்று ஆய்வாளர் பாபாசாஹேப் புரந்தரே காலமானார்**
  - பிரபல வரலாற்று ஆய்வாளரும் பத்ம விபூஷண் விருது பெற்றவருமான பாபாசாஹேப் புரந்தரே என்று அழைக்கப்படும் பல்வந்த் மோரேஷ்வர் புரந்தரே காலமானார்.
  - மராட்டிய மன்னர் சிவாஜி குறித்து புரந்தரே எழுதிய 'ராஜா சிவசத்ரபதி' என்ற இரண்டு பாகங்கள் கொண்ட புத்தகம் மகாராஷ்டிரத்தில் மிகவும் புகழ்பெற்றதாகும்.
  - மேலும் ஜான்தா ராஜா என்ற பெயரில் சிவாஜி மன்னரைப் பற்றி வரலாற்று நாடகத்தை 1980ஆம் ஆண்டில் அரங்கேற்றினார்.
  - புரந்தரேவுக்கு கடந்த 2019ஆம் ஆண்டில் பத்ம விபூஷண் விருது வழங்கி மத்திய அரசு கௌரவித்தது.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **'இன்டர்போல்' உயர் பதவியில் சிபிஐ இயக்குநர்**
  - இஸ்தான்புலில் நடைபெற்று வரும் இன்டர்போலின் 89-ஆவது வருடாந்திரக் கூட்டத்தில், ஆசிய நாடுகளின் பிரதிநிதியாக சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீண் சின்ஹா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
  - ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த காவல்துறை தலைவர் அகமது நாசர் அல்-ரயிசி இன்டர்போல் அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற முதல் பெண் - கமலா ஹாரிஸ்**
  - அதிபர் ஜோ பைடனுக்கு காலனாஸ்கோப்பி என்ற பரிசோதனை காரணமாக, அமெரிக்க அதிபராக கமலா ஹாரிஸ் (85 நிமிடங்கள்) பொறுப்பேற்றார்.
  - அதிபர் பொறுப்பேற்ற முதல் பெண்
  - முதல் பெண் கருப்பினத்தவர்
  - முதல் தெற்காசிய அமெரிக்கர்
  - 2021 ஜனவரியில் துணை அதிபராகப் பொறுப்பேற்றார் .
- 15-வது நிதி குழுவின் தலைவர் - என்.கே. சிங்

## மாநாடுகள்

- **'சர்வதேச விநியோகச் சங்கிலி விரிவாக்கம்' மாநாடு**
  - ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக இத்தாலி சென்ற பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஏற்பாடு செய்திருந்த 'சர்வதேச விநியோகச் சங்கிலி விரிவாக்கம்' என்ற மாநாட்டில் கலந்து கொண்டார்.
- **இந்திய-சர்வதேச வர்த்தகக் கண்காட்சி**
  - தில்லியில் பிரகதி மைதானத்தில் நடைபெற்ற 40-வது இந்திய-சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தமிழ்நாடு நாள் விழா (நவம்பர் 16) கொண்டாடப்பட்டது.
- **16-வது ஜி-20 உச்சி மாநாடு**
  - ஜி20 கூட்டமைப்பின் 16-வது உச்சி மாநாடு இத்தாலி தலைநகர் ரோம் நகரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் மோடி, 2022-ம் ஆண்டுக்குள் இந்தியா 500 கோடி தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் என்றார்
  - ட்ரேவி நீரூற்று ரோமில் உள்ளது. இத்தாலி பிரதமர் மரியோ டிராகி
- **26-வது பருவநிலை மாற்ற மாநாடு (கிளாஸ்கோ மாநாடு)**
  - கிளாஸ்கோ (ஸ்காட்லாந்து) மாநாட்டில் பருவநிலை மாற்றத்தின் சவாலை சமாளிக்கப் பஞ்சாமிர்தம் என்ற ஐந்து முக்கிய உறுதிமொழிகளைப் பிரதமர் மோடி அளித்தார்.
    1. 2070க்குள் இந்தியா நிகர கார்பன் உமிழ்வைப் பூஜ்ஜியம் ஆக்கும்.
    2. 2030-ஆம் ஆண்டில் புதுப்பிக்க எரிசக்தித் திறனை 500 கிகாவாட்டாக அதிகரிக்க இந்தியா உயர்த்தும்.



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

3. 2030-க்குள் இந்தியா தனது பொருளாதாரத்தின் கார்பன் சார்பை 45 சதவீதமாகக் குறைக்கும்
4. 2030-க்குள் இந்தியா தனது மின் தேவையில் 50 சதவீதத்தைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யும்
5. 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியா தனது கார்பன் உமிழ்வில் 1 பில்லியன் டன் அளவைக் குறைக்கும்.

- உலக மக்கள் தொகையில் இந்தியா 17% உள்ளனர். ஆனால் கரியமில வாயுவின் இந்தியாவின் பங்கு 5% ஆகும்.
- மாற்று எரிசக்தி திறனில் இந்தியா 4-வது இடம்
- சூரியன் மின்சக்தி வெற்றிகரமாக செயல்படுவதற்கான திறனை அதிகரிக்க "ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டமைப்பு" – தீர்வாக இருக்கும் என்று பிரதமர் அறிவிப்பு.
- 2050- அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பியன் நாடுகள் இலக்கு.
- 2060 - சீனா இலக்கு.
- கிளாஸ்கோ மாநாட்டில் திருவண்ணாமலையை சேர்ந்த மாணவி வினிஷா உமா ஷங்கர் மாநாட்டில் பேசினார்.

## திட்டம்

- **பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித்திட்டம் 5 ஆண்டுகள் நிறைவு**
  - நோக்கம்: அனைவருக்கும் வீடு
  - நவம்பர் 20, 2016இல் தொடங்கப்பட்டது.
  - மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் மாநில அரசுடன் இணைந்து செயல்படுகிறது.
- **பிரதமரின் உத்வேகம் (கதி சக்தி திட்டம்)**
  - அக்டோபர் 13, 2021 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் முதல் தேசிய உள்கட்டமைப்பு மாஸ்டர்பிளான் ஆன பிரதான் மந்திரி கதி சக்தி (PMGS) திட்டத்தைத் தொடங்கிவைத்தார்,
  - இத்திட்டத்தின் கீழ் துறைமுகங்களில் போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதற்காக (100 லட்சம் கோடி செலவில்) 101 திட்டங்கள் துவங்கப்படும்.
  - பாரத் மாலா திட்டம்: நாட்டின் முக்கிய நகரங்களை இணைக்கும் திட்டம்
  - சாகர் மாலா திட்டம்: கடலோர போக்குவரத்தை ஊக்குவிக்கும் திட்டம்
- **தூய்மை பாரத இயக்கம் 2.0**
  - நோக்கம்: 2026-ஆம் ஆண்டிற்குள் நாட்டிலுள்ள அனைத்து நகரங்களையும் கழிவில்லாத நகரங்களாக மாற்றுவது.



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## பாதுகாப்பு

- **"INS – வேலா" போர்க்கப்பல்**
    - ப்ராஜெக்ட் 75 - திட்டத்தின் கீழ் ஸ்கார்பின் ரக நீர்மூழ்கி கப்பல் வடிவில் இந்தியாவில் உருவாக்கப்பட்ட நான்காவது "INS – வேலா" போர்க்கப்பல் வடிவமைக்கப்பட்டது.
    - இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட முதல் கப்பல் INS கல்வாரி, இரண்டாவது INS கண்டேரி, மூன்றாவது INS கரஞ்ஜ் ஆகும்.

## விருதுகள்

- **பத்ம விருதுகள் - 2020**
    - 2020-ஆம் ஆண்டுக்கான 145 பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். பத்ம விருது பெற்றவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த 12 பேர் இடம்பெற்றுள்ளனர்.

| **பத்ம விருதுகள்-2020** | |
|---|---|
| **பத்மவிபூஷண்** நாட்டின் இரண்டாவது உயரிய விருது | ஜார்ஜ் பெர்னாண்டஸ் (முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்) |
| | அருண் ஜேட்லி (முன்னாள் மத்திய அமைச்சர்) |
| | சுஷ்மா ஸ்வராஜ் (முன்னாள் மத்திய அமைச்சர்) |
| | பண்டிட் சாணுலால் மிஸ்ரா (ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்) |
| | மேரி கோம் (விளையாட்டு வீராங்கனை) |
| | உடுப்பி ஸ்ரீ பெஜாவர் அதோஷஜ மடம் விஸ்வேஷ தீர்த்த சுவாமிஜி |
| | அனிருத் ஜெகந்நாத் (மோரீஷஸ் நாட்டின் முன்னாள் பிரதமர் & குடியரசுத் தலைவர்) |
| **தமிழகத்தைச் சேர்ந்த 9 பேருக்கு பத்மஸ்ரீ விருது** | |
| **பெயர்** | **துறை** |
| பிரதீப் தலப்பில் | சென்னை ஐஐடி விரிவுரையாளர் |
| லலிதா, சரோஜா சிதம்பரம் | கலை இசைக்காக (இரட்டை விருது) |
| மனோகர் தேவதாஸ் | இலக்கியவாதி |
| எஸ். ராமகிருஷ்ணன் | மாற்றுத் திறனாளியும் சமூக சேவகருமான ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தைச் சேர்ந்தவர் |
| வி.கே. முனுசாமி | சுடுமண் (டெரகோட்டா) கலைஞர் புதுச்சேரி |
| காலிஷாபி மெஹபூப், ஷேக் மெஹபூப் சுபானி | நாகசுரக் இசைக்கலைஞர்கள் (இரட்டை விருது) |

- **சென்னை ஐ.ஐ.டி பேராசிரியருக்கு விருது**
    - சர்வதேச ஒலியியல் மற்றும் அதிர்வு நிறுவனம் வழங்கும் சிறப்பு ஃப்ல்லோஷிப் விருதை திரு.R.I. அஜித் பெற்றுள்ளார். ஏரோஸ்பேஸ் துறையில் பணிபுரிகிறார்.
    - Thermoelectric instability எனும் புத்தகத்தை எழுதியுள்ளார்.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கே.எம்.செரியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**
  - இருதய நிபுணர் மற்றும் Frontier Lifeline Hospital நிறுவன தலைவர் கே.எம்.செரியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- **மத்திய பிரதேச மாநிலத்துக்கு சர்வதேச விருது**
  - மத்திய பிரதேச சுற்றுலா வாரியத்தின் கிராமப்புற சுற்றுலாத் திட்டத்துக்கு "வேர்ல்ட் டிராவல் மார்ட்" அமைப்பின் சிறந்த சுற்றுலாத்திட்டத்துக்கான விருது கிடைத்துள்ளது.
  - இதே கிராம சுற்றுலா பிரிவில் பிராந்திய அளவிலான ஸ்வர்ண புரஸ்கார் விருதும் விருதும் மத்திய பிரதேச சுற்றுலாத் துறைக்கு கிடைத்துள்ளது.
- **டாக்டர் சுதா சேஷய்யனுக்கு பட்டம்**
  - டாக்டர் சுதா சேஷய்யனுக்கு பிரிட்டனின் ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் (எடின்| பரோ) சார்பில் கௌரவப் பட்டம் (எஃப்ஆர்சிஎஸ்) வழங்கப்பட்டது.
  - பிரிட்டனின் முதன்மைக் கல்வி நிறுவனமான ராயல் கல்லூரியில் இத்தகைய உயரிய அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் முதல் பெண் என்ற பெருமையை டாக்டர் சுதா சேஷய்யன் பெற்றுள்ளார்.
- **சர்வதேச திரைப்பட விழா**
  - 52-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா மாநிலம், பனாஜியில் உள்ள டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.
  - 'இந்த ஆண்டின் சிறந்த இந்திய நட்சத்திரம்' விருது நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹேமமாலினிக்கு வழங்கப்பட்டது.
  - ஹாலிவுட் இயக்குனர் மார்ட்டின் ஸ்கார்சேஸி, ஹங்கேரிய இயக்குநர் இஸ்த்வன் ஸாபோ ஆகியோருக்கு 'சத்யஜித்ரே வாழ்நாள் சாதனை விருது' வழங்கப்பட்டது.
- **'பிரதம்' அமைப்பிற்கு இந்திரா காந்தி அமைதி விருது**
  - இந்தியா மற்றும் உலகில் உள்ள மற்ற நாடுகளில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு தரமான கல்வி தரும் சமூக அமைப்பு – பிரதம்.
  - முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி T.S. தாக்கூர் இந்த விருது வழங்கும் குழுவின் தலைவர் ஆவார்.
- **அபிநந்தனுக்கு 'வீர் சக்ரா' விருது**
  - பாகிஸ்தான் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தி துணிச்சலுடன் செயல்பட்ட குரூப் கேப்டன் அபிநந்தன் வர்த்தமானுக்கு 'வீர் சக்ரா' விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
  - போர்க் காலத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்காக வழங்கப்படும் 3-ஆவது மிகப்பெரிய விருது இதுவாகும்.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தமிழக வீரருக்கு "வீர் சக்ரா" விருது**
  - தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்வான் மோதலில் வீரமரணமடைந்த தமிழகத்தைச் சேர்ந்த ஹவில்தார் கே.பழனிக்கு அறிவிக்கப்பட்ட 'வீர் சக்ரா' விருதை அவரின் மனைவி வானதியிடம் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- **தளபதி பிக்குமல்லா சந்தோஷ் பாபுவுக்கு 'மகாவீர் சக்ரா' விருது**
  - சீன ராணுவத்தினருடன் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் நிகழ்ந்த மோதலில் வீர மரணமடைந்த படைத் தளபதி பிக்குமல்லா சந்தோஷ் பாபுவுக்கு 'மகாவீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.
  - ராணுவத்தில் துணிச்சலை வெளிப்படுத்தியவர்களுக்கு வழங்கப்படும் 2-ஆவது உயரிய விருது 'மகாவீர் சக்ரா ஆகும்.
  - கல்வான் பள்ளத்தாக்கு மோதலின்போது வீர மரணமடைந்த தீபக் சிங், குர்தேஜ் சிங், தேஜிந்தர் சிங் ஆகியோருக்கும் 'வீர் சக்ரா' விருது வழங்கப்பட்டது.
- **"ப்ராஜக்ட் சைரன் விருது"**
  - ஜூன் 2020-ஜூன் 2021 வரை அதிகளவிலான தற்கொலை பற்றிய செய்திகளை வெளியிட்டதற்காக தி இந்து நாளிதழுக்கு ப்ராஜக்ட் சைரன் விருதை (IMHO) இந்திய மனநல கண்காணிப்பகம் வழங்ககியுள்ளது.
- **'கர்நாடக ரத்னா' விருது'**
  - மறைந்த கன்னட நடிகர் புனீத் ராஜ்குமாருக்கு கர்நாடக ரத்னா விருது வழங்கப்படும் என்று அந்த மாநில முதல்வர் பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.
- **இந்தோ-திபெத் எல்லைக் காவல் படைவீரர்களுக்கு சிறப்பு பதக்கம்**
  - சீன ராணுவத்துடன் கிழக்கு லடாக் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது சிறப்பாக கடமையாற்றியதற்காக இந்தோ-திபெத் எல்லைக் காவல் படையை (ஐடிபிபி) சேர்ந்த 260 வீரர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சரின் சிறப்பு நடவடிக்கைப் பதக்கம் வழங்கப்பட்டது.
  - 1962-ல் இந்தோ-திபெத் எல்லைக் காவல்படை உருவாக்கப்பட்டது.
- **வீர் சக்ரா விருது – 2021**
  - அபினந்தன் வர்த்தமன் & K.பழனி (கல்வான் மோதலில் வீரமரணம்)
  - என் வயிறு புலி தங்கியிருந்த குகை என்மகன் போர்க்களத்தில் இருப்பான் – புறநானூற்றுப் பாடல் (அபினந்தனுக்கு ஸ்டாலின் வாழ்த்து)
- **கிராம சுற்றுலா விருது**
  - உலக சுற்றுலா மார்ட் (World Travel Mart) அமைப்பின் சிறந்த சுற்றுலா திட்டத்துக்கான விருது – மத்தியப்பிரதேசத்தின் சுற்றுலா வாரியத்தின் கிராமப்புற சுற்றுலா திட்டத்துக்கு வழங்கப்பட்டது.
  - பிராந்திய அளவிலான ஸ்வர்ண ப்ரஸ்கார் விருது மத்தியப்பிரதேசம் சுற்றுலா துறை
  - பெண்களுக்கு பாதுகாப்பான சுற்றுலா தளங்கள் விருது – மத்தியப்பிரதேசம்



CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- சுற்றுலாவை ஊக்குவிக்க பாரத் கௌரவ் தனியார் ரயில் திட்டம்

❖ **தூய்மை அமுத பெருவிழா- தூய்மை விருது (ஸ்வட்ச்ச சர்வேக்சன்) 2021**:

- தூய்மை மாநிலம்: சட்டீஸ்கர்
- தூய்மை நகரம் – இந்தூர் முதலிடம் (5-ஆவது முறை)
- 2-வது இடம் – சூரத் , 3-வது இடம் - விஜயவாடா
- மாநில தலைநகரங்களில் சிறந்த முன்னோடி முயற்சி விருது – சென்னை
- தனித்திறன் செயல்பாட்டு நகர விருது – வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி
- தூய்மையான கங்கை நகரம் – வாரணாசி
- மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம்

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **ராகுல் திராவிட் தலைமைப் பயிற்சியாளராக நியமனம்**

- இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ராகுல் திராவிட் நியமிக்கப்பட்டார்.

❖ **சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி**

- 2025-ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்தும் வாய்ப்பை பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது ஐசிசி. இதையடுத்து சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்நாட்டில் ஐசிசியின் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.
- அடுத்த போட்டிகள் நடக்கும் இடங்கள்:
- 2029 - சாம்பியன்ஸ் கோப்பை போட்டி - இந்தியா
- 2026 - டி20 உலகக் கோப்பை போட்டி - இந்தியா
- 2031 - 50 ஓவர் உலகக் கோப்பை போட்டி - இந்தியா இலங்கை மற்றும் வங்கதேசம்.

❖ **டி20 உலகக் கோப்பை போட்டி**

- டி20 உலகக் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி சாம்பியன் ஆனது.

❖ **உலக யோகாசன சாம்பியன்ஷிப் போட்டி**

- முதல் முறையாக அடுத்த ஆண்டு ஜூன் மாதம் உலக யோகாசன சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தவுள்ளது.

❖ **தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி**

- உ.பி.யின் கோண்டா நகரில் நடைபெற்ற தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் 65 கிலோ பிரிவில் ரயில்வே வீராங்கனை நிஷா தாஹியா சாம்பியன் ஆனார்.

❖ **உலக டேபிள் டென்னிஸ் கன்டெண்டர் போட்டி**

- ஸ்லோவேனியாவில் நடைபெற்ற உலக டேபிள் டென்னிஸ் கன்டெண்டர் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மணிகா பத்ரா, அர்ச்சனா காமத் ஜோடி சாம்பியன் ஆனது.



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தேசிய ஜூனியர் துப்பாக்கி சுடுதல்: பதக்கம் வென்ற இரட்டையர்கள்**
  - தேசிய ஜூனியர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பஞ்சாபைச் சேர்ந்த இரட்டையர் சகோதரர்கள் விஜய்வீர் சித்து தங்கமும், அவரது சகோதரர் உதய்வீர் சித்து 2-ஆம் இடம் பிடித்து வெள்ளியும் வென்றனர்.
- **பாரா பவர் லிஃப்டிங்: பதக்கம் வென்று பரம்ஜீத் சாதனை**
  - ஜார்ஜியாவில் நடைபெறும் உலக பாரா பவர் லிஃப்டிங் சாம்பியன்ஷிப்பில் இந்திய வீரர் பரம்ஜீத் குமார் வெண்கலப் பதக்கம் வென்றார். இதன் மூலம், உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- **சையது முஷ்டாக் அலி டி20: தமிழக அணி சாம்பியன்**
  - தில்லியில் நடைபெற்ற 14-ஆவது சீசன் இறுதி ஆட்டத்தில் கர்நாடகத்தை வீழ்த்தி தமிழக அணி சாம்பியன் ஆனது.
- **தெற்காசிய கூடைப்பந்து: சாம்பியன் இந்தியா**
  - வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய கூடைப்பந்து போட்டியில் இந்திய அணி 6-ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.
- **சர்வதேச பாரா பாட்மின்டன்: இந்தியாவுக்கு 47 பதக்கங்கள்**
  - உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்தியா 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என 47 பதக்கங்கள் வென்று அசத்தியுள்ளது.
- **ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி**
  - ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் காம்பவுண்ட் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப் பதக்கம் வென்றார்.
- **துப்பாக்கி சுடுதல்: மானு/ஜாவத் ஜோடிக்கு தங்கம்**
  - போலந்தில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் (ஐஎஸ்எஸ்எஃப்) பிரெசிடென்ட்'ஸ் கோப்பை போட்டியில் இந்தியாவின் மானுபாக்கர்/ ஈரானின் ஜாவத் ஃபருக்கி இணை கலப்பு அணிகள் பிரிவில் தங்கம் பதக்கம் வென்றது.
- **சர்வதேச துப்பாக்கி சுடுதல் இந்தியாவுக்கு 5 பதக்கங்கள்**
  - போலந்தில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் (ஐஎஸ்எஸ்எஃப்) பிரெசிடெண்ட்ஸ் கோப்பை போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்களுடன் நிறைவு செய்துள்ளது.
- **செயிலிங் : இந்தியாவின் நேத்ரா சாம்பியன் பட்டம் வென்றார்**
  - ஸ்பெயினில் நடைபெற்ற செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் லேசர் ரேடியல் பிரிவில் இந்தியாவின் நேத்ரா குமணன் தங்கப் பதக்கம் வென்றார்.
- **சர்வதேச செஸ்: இனியன் பட்டம் வென்றார்**
  - ஐரோப்பிய நாடான செர்பியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் ஈரோட்டைச் சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டர் இனியன் பட்டம் வென்றார்.

- **ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி**
  - வங்காளதேசம், டாக்காவில் நடைபெற்ற ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஜோதிசுரேகா தங்கம் வென்றார்.
- **தெற்காசிய கூடைப்பந்து போட்டி 2021**
  - வங்காளதேசம், டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய கூடைப்பந்து போட்டியில் இந்தியா 6-வது முறையாக சாம்பியன்ஷிப் பட்டம் வென்றது.
  - இந்திய கேப்டன் – விசேஷ் பிருகுவன்ஷி
- **சர்வதேச பாராபேட்மிட்டன் போட்டி – 2021**
  - உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பாராபேட்மிட்டன் போட்டியில் இந்தியா 16 தங்கம் உட்பட 47 பதக்கம் வென்றது.
- **'கேல் ரத்னா' விருதுகள்' - 2021**
  - இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் 2021-ம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகளை அறிவித்தது.
  - டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தடகள வீரர் நீரஜ் சோப்ரா உள்பட 12 விளையாட்டு வீரர்களுக்கு மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது (இதற்கு முன்னர் ராஜீத் காந்தி கேல் ரத்னா விருது என அழைக்கப்பட்டது) அறிவிக்கப்பட்டுள்ளது.
  - தமிழகத்தைச் சேர்ந்தவரும், ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்ற முதல் இந்திய வாள்வீச்சு வீராங்கனை என்ற பெருமையை பெற்றவருமான சி.ஏ.பவானி தேவி, கிரிக்கெட் வீரர் ஷிகர் தவன் உள்பட 35 பேருக்கு அர்ஜுனா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
  - 2021-ம் ஆண்டு விருதுக்கான வெற்றியாளர்களை, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி முகுந்தகம் சர்மா தலைமையிலான தேர்வுக் குழு தேர்வு செய்துள்ளது.

| தியான் சந்த் கேல் ரத்னா விருதுகள் - 2021 | |
|---|---|
| வீரர் / வீராங்கனை | துறை |
| நீரஜ் சோப்ரா | ஈட்டி எறிதல் |
| ரவி குமார் | மல்யுத்த வீரர் |
| பி.ஆர். ஸ்ரீஜேஷ் | ஹாக்கி கோல் கீப்பர் |
| லோவ்லினா போர்கோஹைன் | குத்துச்சண்டை |
| மிதாலி ராஜ் | கிரிக்கெட் |
| சுனில் சேத்ரி | கால்பந்து |
| சுமித் ஆன்டில் | (பாரா ஒலிம்பிக் தடகளம்) |
| அவானி லெக்ரா | (பாரா ஒலிம்பிக் துப்பாக்கிச்சூடு) |
| பிரமோத் பகத் | (பாரா ஒலிம்பிக் பேட்மிண்டன்) |
| கிருஷ்ணா நாகர் | (பாரா ஒலிம்பிக் பேட்மிண்டன்) |
| மணீஷ் நர்வால் | (பாரா ஒலிம்பிக் துப்பாக்கிச் சூடு) |
| மன்ப்ரீத் சிங் | ஹாக்கி |



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **உலக பாரா பவர்லிப்ட்டிங் சாம்பியன்ஷிப்**
  - ஜார்ஜியாவில் நடைபெற்ற உலக பாரா பவர்லிப்ட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா முதன் முறையாக (முதல் இந்தியர் – பரம்ஜீத் குமார்) வெண்கலப் பதக்கம் வென்றது.

## புள்ளி விவரம்

- **லஞ்சம் வாங்குவதில் 82-ஆவது இடத்தில் இந்தியா**
  - நிறுவனங்கள் அரசு அதிகாரிகளுக்கு கையூட்டு அளிக்க வேண்டிய அபாயம் குறைவாக உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 77- ஆவது இடத்திலிருந்து 82-ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.
- **'தூய்மை அமுதப் பெருவிழா'**
  - மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள இந்தூர் நகரம் நாட்டிலேயே சிறந்த தூய்மை நகரம் -2021 க்கான விருதை தொடர்ந்து 5-ஆவது முறையாக பெற்றது.
  - சூரத் விஜயவாடா முறையே 2-வது, 3-வது இடத்தைப் பெற்றன.
  - மாநில தலைநகரங்களில் சிறந்த முன்னோடி முயற்சிக்கான விருதை சென்னை மாநகராட்சியும், சிறிய நகரங்கள் வரிசையில் தனித் திறன் செயல்பாட்டு நகர விருதை வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியும் பெற்றன.
- **ஐ.நா நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு சிம்லா முதலிடம்**
  - ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை சிறப்பாகச் செயல்படுத்தும் நகரங்களில் ஹிமாசல் தலைநகர் சிம்லா முதலிடம் பிடித்துள்ளது.
  - இந்தப் பட்டியலில் தமிழகத்தின் கோவைநகரம் 2-ஆம் இடத்தையும், சண்டீகர் 3-ஆம் இடத்தையும், திருச்சி நகரம் 8-ஆம் இடத்தையும் பிடித்துள்ளன.
- **நாட்டிலேயே பிகாரில் அதிக ஏழைகள்**
  - நாட்டிலேயே பிகார் மாநிலத்தில் அதிக சதவீதத்திலான ஏழைகள் உள்ளதாக நீதி ஆயோக் வெளியிட்ட பலபரிமாண வறுமைக் குறியீட்டுப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ஜார்க்கண்ட், 42.16 சதவீத ஏழைகளுடன் 2-வது இடத்திலும், உத்தர பிரதேசம், 37.79 சதவீத ஏழைகளுடன் 3-வது இடத்திலும் உள்ளன.
  - தாத்ரா-நகர் ஹவேலி 27.36 சதவீத ஏழைகளுடன் யூனியன் பிரதேசத்தில் முதலிடத்தில் உள்ளது.
- **ஐ.நா-வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு – 2 பட்டியல்**
  - ஐ.நா-வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு – 2 ஐ செயல்படுத்தும் நகரங்கள் பட்டியலில் சிம்லா , கோயம்புத்தூர், சண்டிகர் ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன.
  - திருச்சி 8-வது இடத்தில் உள்ளது
  - இந்த அறிக்கையை நிதி ஆயோக் மற்றும் GIZ எனும் ஜெர்மனி நிறுவனமும் இணைந்து வெளியிடுகின்றன


CHENNAI - 944506552 / 944509552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தேசிய சுகாதார குடும்ப ஆய்வு (NFHS) – 5**
  - தேசிய அளவில் மொத்த கருத்தரித்தல் விகிதங்களில் ஒரு பெண்ணுக்கான குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை மேலும் குறைந்து 2.2-லிருந்து 2.0 ஆகி இருக்கிறது. 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இது சண்டிகரின் 1.4 என்பதிலிருந்து உத்தரப்பிரதேசத்தின் 2.4 வரை உள்ளது.
  - அகில இந்திய அளவில் மருத்துவமனையில் மகப்பேறு விகிதம் கணிசமாக 79 சதவீதத்திலிருந்து 89 சதவீதமாக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் இது 100 சதவீதமாக உள்ளது. இரண்டாம் கட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 7-ல் இந்த விகிதம் 90 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
  - பிரசவத்திற்கு பின்னர் தாய் – சேய் பராமரிப்பு விகிதம் 62.4% லிருந்து 78%-ஆக உயர்ந்துள்ளது.
  - 2019-21 ஆய்வின்படி, இந்தியாவில் பாலின விகிதாச்சாரம் 1000-லிருந்து 1100-ஆக உயர்ந்துள்ளது.
  - 2019-20-இல் 929/1000 ஆக இருந்த பிறப்பு நிலையிலான பாலின விகிதாச்சாரம் மேம்பட்டுள்ளது.
  - NFHS -4 ஆய்வின்படி, 2015 – 2016 இல் 991/1000 (பாலின விகிதம்)
  - NFHS -3 ஆய்வின்படி, 2005 – 2006 இல் 1000/1000 (பாலின விகிதம்)
- **தேசிய பல் பரிமாண வறுமைக் குறியீடு – நிதி ஆயோக் வெளியீடு**

| **தரவரிசை** | **மாநிலம்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| முதலிடம் | பீகார் | 51.95 |
| இரண்டாம் இடம் | ஜார்கண்ட் | 42.16 |
| மூன்றாம் இடம் | உத்திரபிரதேசம் | 37.79 |
| நான்காம் இடம் | மத்தியபிரதேசம் | 36.65 |
| ஐந்தாம் இடம் | மேகாலயா | 32.67 |
| 24-வது இடம் | பஞ்சாப் | 5.59 |
| 25-வது இடம் | தமிழ்நாடு | 4.89 |
| 26-வது இடம் | சிக்கிம் | 3.82 |
| 27-வது இடம் | கோவா | 3.76 |
| 28-வது இடம் | கேரளா | 0.71 |
| **தரவரிசை** | **யூனியன் பிரதேசங்கள்** | **புள்ளிகள்** |
| முதலிடம் | தாதர் நகர் ஹவேலி | 27.36 |
| இரண்டாம் இடம் | ஜம்மு & காஷ்மீர், லடாக் | 12.58 |
| 7-வது இடம் | லட்சத்தீவு | 1.8 |
| 8-வது இடம் | புதுச்சேரி | 1.78 |

## முக்கிய தினம்

- நவம்பர் 1 – உலக தாவர நாள்
- நவம்பர் 7 – பச்சிளம் குழந்தை பாதுகாப்பு தினம்
- நவம்பர் 7 - மருத்துவ இயற்பியலுக்கான சர்வதேச தினம்



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நவம்ப்ர் 7 - தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்
  - மருத்துவ இயற்பியலுக்கான சர்வதேச அமைப்பு இத்தினத்தை அனுசரிக்க தொடங்கியது.
- நவம்பர் 11 - தேசிய கல்வி தினம்
  - மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர்.
- நவம்பர் 14 - குழந்தைகள் தினம்
  - இந்தியாவின் முதல் பிரதமர் நேருவின் பிறந்த நாள் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
- நவம்பர் 14 - உலக நிரிழிவு தினம்
- குழந்தைகள் உரிமை வாரம் – 14 நவம்பர் முதல் 20 நவம்பர் வரை
- நவம்பர் 15 - ஜன் ஜாதிய கௌரவ் தினம் (பிர்சா முண்டா பிறந்த நாள்)
- நவம்பர் 16 - தேசிய பத்திரிக்கை தினம்
- நவம்பர் 17 - சர்வதேச கணைய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்
- நவம்பர் 18 முதல் 24 வரை - உலக நுண்ணுயிர்க் கொல்லி மருந்து விழிப்புணர்வு வாரம்
- 
- நவம்பர் 19 - உலக குழந்தை மீதான பாலியல் வன்முறை தடுப்பு நாள்
- நவம்பர் 19 - தேசிய ஒருங்கிணைப்பு தினம்
  - இந்தியாவின் முதல் பெண் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்தநாள் தேசிய ஒருங்கிணைப்பு நாளாக அனுசரிக்கப்படுகிறது.
- நவம்பர் 19 - உலக குடிமையாளர்கள் தினம்
- நவம்பர் 19 - உலக கழிவறை தினம்
- நவம்பர் 19 முதல் 25 வரை - பாரம்பரிய உலக மரபு சின்னங்கள் பாதுகாப்பு வாரங்கள் விழா இழந்த கல்வி உரிமையை பெறும் வகையில் குழந்தைகள் உரிமை வாரம் UNICEF அமைப்பால் கடைப்பிடிக்கப்படுகிறது.
- நவம்பர் 20 - சர்வதேச குழந்தைகள் உரிமை தினம்
- நவம்பர் 25 - சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு நாள்
- நவம்பர் 26 - இந்திய அரசமைப்புச் சட்ட தினம்
  - அரசமைப்புச்சட்டம் 1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினம்.
- நவம்பர் 26 - தேசிய பால் தினம்
  - வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட வர்கீஸ் குரியனின் நூற்றாண்டு தினம்
- நவம்பர் 27 - தேசிய உடல் உறுப்புதான தினம்
- நவம்பர் 28 - தேசிய மாணவர் படை தினம்



**CHENNAI** - 944506552 / 944509552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com